**புதுக்கோட்டை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**
(04-11-2015 – 08-11-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 03-11-2015

**கடந்த கால வானிலை 30-10-2015 முதல் 02-11-2015 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 38-.6 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 30-33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24-25 |
| மேக மூட்டம் | 6-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 77-92 |
| காற்றின் வேகம்(கி.மீ / மணி ) | 6-8 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 08-11-2015 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 04.11.15 | 05.11.15 | 06.11.15 | 07.11.15 | 08.11.15 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 12 | 10 | 12 | 10 | 10 |
| அதிக பட்ச வெப்பநிலை(செ) | 31 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24 | 24 | 24 | 24 | 24 |
| மேக மூட்டம் | 7 | 7 | 7 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 92 | 90 | 88 | 90 | 90 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 84 | 82 | 80 | 82 | 84 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 6 | 6 | 6 | 6 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

**குறுஞ்செய்தி :**

அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை: லேசான மற்றும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், மக்காச்சோளம் மற்றும் கரும்பு**

**பருவம்: நெல்- பூக்கும் மற்றும் முதிர்ச்சி பருவம், மக்காச்சோளம்- அறுவடை பருவம்**

- நெற்பயிரில் இலைமடக்குப் புழு தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோரிபைரிபாஸ் 20 இ.சி. 500மி.லி. / ஏக்கர் அல்லது புரபனோபாஸ் 50 இ.சி. ஏக்கருக்கு 400 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.
- நெல்லில் குலை நோயினைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஹனோசான் 200 மி.லி. அல்லது டிரைசைகலசோல் 200 கிராம் தெளிக்கவும். முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏக்கருக்கு சூடோமோனோஸ் ப்ளூரசன்ஸ் 500 கிராம் பவுடரை 200 மி.லி. தண்ணீரில் கலந்து மாலை வேளையில் தெளிக்கவும்.
- நெற்பயிரில் பழுப்பு நிற நோய் காணப்பட்டால். அதனைக் கட்டுப்படுத்த விவசாயிகள் 10-15 நாட்கள் இடைவெளியில் 2-3 முறை மேன்கோசெப் 2 கிராம்/ லிட்டர் தெளிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றன.
- மக்காச்சோளத்தில் அடி சாம்பல் நோயினைக் கட்டுப்படுத்த Metalaxyl+Mancozeb @ 100g/ha ஆகியவற்றை விதைத்த 20 நாளில் தெளிக்கவும்.
- கரும்பில் துரு நோய் கட்டுப்படுத்த மேன்கோசெப் 2கி. /ஏக்கர் தெளிக்கவும்.